ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2288/11 - 2022 ජූලි මස 12 වැනි අඟහරුවාදා - 2022.07.12

2288/11 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2006/PC/239.
குறிப்பு இல.: KMB/LAN/ACQUI/2/59.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், கம்புரு பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 320-A, கதார கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள, இ.கி.வ. 182 இல் பிற்சேர்க்கை இல. 10, தாள் இல. 10 வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பின்வரும் காணித் துண்டுகளின் விபரங்கள்:

01. துண்டு இல. 97

காணியின் பெயர்: இஹலஹிரிதெனிய அல்லது கந்துருகஹதெனிய; விபரம்: தரிசு நிலம்; உரிமை கோருவோர்: ஹேவா கொடிதுவக்கு மணமால ஆராச்சிகே சோமபால; விஸ்தீரணம்: 0.2725 ஹெக்டயார்.

02. துண்டு இல. 98

காணியின் பெயர்: - ; விபரம்: கால்வாய்; உரிமை கோருவோர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0388 ஹெக்டயார்.

03. துண்டு இல. 99

காணியின் பெயர்: இஹலஹிரிதெனிய அல்லது கந்துருகஹதெனிய; விபரம்: தரிசு நிலம், பஸ் தரிப்பிடம் காணப்படுதகின்றன; உரிமை கோருவோர்: ஹேவா கொடிதுவக்கு மணமால ஆராச்சிகே சோமபால; விஸ்தீரணம்: 0.0053 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கம்புருபிட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும் 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

குசலக நாணயக்கார,
பிரதேச செயலாளர்,
கம்புருபிட்டிய.

பிரதேச செயலகம்,
கம்புருபிட்டிய,
2022, யூலை 06.

EOG 07 - 0059

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 03/ජේ/79/ඊ/462.
குறிப்பு இல.: කඹු/ඉඅ/3281.

2263/39 ஆம் இலக்க, 2022.01.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் காணியின் உரிமை/ உரிமை கோருவதற்கான நேர்முகத்தேர்வு 2022.09.06 ஆந் திகதி எனத் திருத்தப்பட்டு நட்டஈடு மற்றும் நட்டஈடு கணக்கிடப்பட்ட முறை என்பவற்றை இரண்டு பிரதிகள் கொண்ட ஆவணத்தை 2022.08.29 ஆந் திகதிக்கு முன் அறிவிக்கப்படல் வேண்டும் என திருத்தப்படு கின்றன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

குசலக நாணயக்கார,
பிரதேச செயலாளர்,
கம்புருபிட்டிய.

பிரதேச செயலகம்,
கம்புருபிட்டிய,
2022, யூலை 06.

EOG 07 - 0060

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.